உ

சிவமயம்.

திருவிடைவாய்த் தேவாரம்.

திருக்களர்

மு. சுவாமிநாத உபாத்தியாயரால்

திருவிடைவாய்க் கல்வெட்டினின்று

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினேழாம் வருடத்தில்

புதிதாய்க் கண்டுபிடித்தது.

(மூன்றாம் பதிப்பு).

திருவாரூர்

"எட்வர்ட் அச்சுக்கூடத்தில்" பதிப்பித்தது.

கலி ௫௦௨௭] கசுஉசு [பங்குனி-மீ

முகவுரை.

கடல் புடைசூழ்ந்த நெடுநிலவுலகிலே வடக்கு இமயமலையையும், கிழக்கு தெற்கு மேற்கு கடலையும் எல்லைகளாகக் கொண்ட இவ்வுலகிலே "திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார்" என்னும் சமயகுரவர் (மூவர்) திருவாய்மலர்ந்தருளிய "தேவாரம்" பெற்றதும்; "மாணிக்கவாசக சுவாமிகள்" திருவாய்மலர்ந்தருளிய "திருவாசகம், திருக்கோவையார்" சம்பந்தமுள்ளதும்; "திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர்" என்னும் ஒன்பதின்மர் திருவாய்மலர்ந்தருளிய "திருவிசைப்பா, திருப்பல்லாண்டு" பெற்றதும்; "ஐயடிகள் காடவர்கோனாயனார்" திருவாய்மலர்ந்தருளிய "திருவெண்பா" பெற்றதும்; "பட்டினத்தடிகள்" திருவாய்மலர்ந்தருளிய "திருப்பாடல்" பெற்றதும்; "அருணகிரிநாதர்" திருவாய்மலர்ந்தருளிய "திருப்புகழ்" பெற்றதும்; "குமரகுருபர சுவாமிகள், சிவப்பிரகாச சுவாமிகள், குரு நமசிவாய சுவாமிகள்" திருவாய்மலர்ந்தருளிய "பிரபந்தங்கள்" பெற்றதும் ஆகிய சிவதலங்களையெல்லாம் "தரிசனம்" பண்ணவும்; ஒவ்வொருதலத்திலுமுள்ள "சிலாசாதனம், செப்புச்சாதனம், கர்னபரம்பரைக்கதை" முதலியவற்றை யறியவும் விரும்பி களப்பாள் சீமான் சீ. இரங்கசுவாமி முதலியாரவர்கள் பொருளுதவியைச் சிரமேற்கொண்டு, "ஐயாண்டு" யாத்திரை பண்ணிய காலத்தில் முற்கூறிய "ஐயடிகள் காடவர்கோனாயனார்" திருவாய்மலர்ந்தருளிய "திருவெண்பா" ஏழாவது பாடலில் பாண்டவாயாற்றின் தென்கரையிலிருப்பதாய்ச் சொல்லப்படும் சிவதலத்தை காவாலகுடி முதல் பாண்டவாயாற்றின் முடிவுவரையில் தேடிப்பார்த்ததில் புலப்படவில்லை. "திருப்பாலைத்துறை" என்னும் சிவதலத்தையடைந்து சுவாமிதரிசனம் பண்ணுங்காலத்தில் ஒருவர் வந்து, "திருவிடைவாசல்" தெரியுமாவென்றார். அஃதெங்கே இருக்கிறதென்றேன். கொரடாச்சேரி ரயிலுக்குத் தெற்கே ஒருமைல் தூரத்தில் வெண்ணியாற்றினின்று "பாண்டவாயாறு" பிரிகிறது; அந்த ஆற்றின் தென்கரையோடு சிறிது தூரம் கிழக்கே சென்று, சாலையைவிட்டுப்

பிரிந்து, கரையிற்போகும் வண்டிப்பாதையோடு கிழக்கே அரை மைல் தூரஞ்சென்றால் "தென்னந்தோப்பு, வெற்றிலைக்கொடிக்கால்" மத்தியில் "திருவிடைவாசல்" கோயிலிருக்கிறதென்றார். அவர் சொன்னபடியே போய்ப்பார்த்தேன். அங்கே கோயில் காடுமூடப்பெற்று வெடித்துச் சரிந்து விழுந்துகொண்டு கதவுகளின்றி சனப்புழக்கம் பூசனையில்லாமல் திறந்திருந்தது. "விநாயகர், மகாலிங்கம், தேவியார், தாண்டவகணபதி, பைரவர், சூரியன், ஆதிசேடன், திருஞானசம்பந்தர்" என்னும் திருவுருவங்கள்மாத்திர மிருந்தன. "காட்டுப்பூனை, மரநாய், கீரிப்பிள்ளை, பாம்பு, வௌவால்" முதலிய செந்துக்கள் பூசைசெய்துகொண்டிருந்தன. தேவியார் கற்பக்கிரகம் வாயிற்படி அடைக்கப்பட்டும், விமானம் மேலே இடிக்கப்பட்டுமிருந்தது. பிரகாரத்திதிலிருந்த காட்டினுட்புகுந்து சுற்றிவந்தேன். பல கல்வெட்டுகள் (சிலாசாதனங்கள்) இருந்தன. அவற்றுள் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாய்மலர்ந்தருளிய "தேவாரப்பதிகம்" ஒன்று அர்த்தமண்டபந் தென்புறத்திலும் மகாமண்டபம் மேல்புறத்திலும் வெட்டப்பட்டிருந்தது. அதனை யெடுப்பதற்கு மகாமண்டபம் மேல்புறத்திலிருந்த பாடல்களோடு நீராழி மண்டபம் செங்கற்சுவர் சம்பந்தமிருந்ததனாலும் செடிகள் மறைத்துக்கொண்டிருந்ததனாலும் இயலவில்லை. அவ்வூரில் உதவி செய்யக்கூடியவர்களுமில்லை. திருக்களருக்கு வந்து "பிச்சையப்பதேவர், வீராசாமி வாண்டையார், கண்ணுசாமி வாண்டையார், குப்புசாமி தொண்டைமான்" என்பவர்களை அழைத்துக்கொண்டுபோய் நீராழிமண்டபத்தை இடித்தும், செடிகளை யழித்தும் ஒருவாறு வெளியுண்டாக்கிக்கொண்டு, அப்பாடல்களை எடுத்தேன். அவற்றுள் ஆறும் பாடலில் சில எழுத்துச்சிதைவுகள் இடையிடையே இருந்தன. என் கூட வந்திருந்த கரம்பைக்குடி ஆ. அ. குமரசாமி பிள்ளையவர்களிடம் காண்பிவித்து ஒருவாறு பாடம் ஏற்படுத்திக்கொண்டு, அப்பாடல்கள் பதினொன்றையும் சிறுபுத்தகரூபமாக்கி ககூகஎ-ம் ஆண்டில் திருவாரூர் எட்வர்ட் அச்சுக்கூடத்திற் பதிப்பித்து வெளிப்படுத்தினேன். எனது நண்பர் திருவாரூர் நகரமடத்துத் தெருவிலிருக்கும் இலக்கண விளக்க பரம்பரை ஸ்ரீ-ல-ஸ்ரீ சோமசுந்தர தேசிகரவர்கள் அப்புத்தகங்களில் சிலவற்றை திருவாவடுதுறை ஆதீனத்து மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக மூர்த்திகளுக்கு அனுப்பினார்கள். அம்மூர்த்திகள் அப்பாடல்களைப் பார்வையிட்டதும் பின்வரும்தந்திகள் அனுப்பினார்கள்:—

From 6—10—1917.

Thiruvidamaruthur.

To

S. Rangasami Mudaliar Avl.,
Trustee,
Thirukalar.

T. M. Swaminatha Ubathiyayar,
Thirukalar.

Glad on receiving arputha Thevaram of Thiruvidavai Kovil found out by you. Come here urgently to receive amount from us to perform pooja, nivadanam, thirupani etc. Come urgently.

Tiruvaduthurai Adinakarthar,
Tiruvadamaruthur.
6—10—1917.

திருவிடைமருதூர்.

S. இரங்கசாமி முதலியார் அவர்கள்,
பஞ்சாயத்தார்,
திருக்களர்.

T. M. சுவாமிநாத உபாத்தியாயர்,
திருக்களர்.

தாங்கள் கண்டுபிடித்த திருவிடைவாய்க்கோயில் அற்புதத் தேவாரம் பெற்றுக்கொண்டு நிரம்பவும் சந்தோஷப்படுகிறேன். பூசை, நிவேதனம், திருப்பணி முதலானதுகள்செய்ய தொகை பெற்றுக்கொள்ள உடனே புறப்பட்டுவரவும்; உடனே வரவும்.

திருவாவடுதுறை ஆதீனகர்த்தர்,
திருவிடைமருதூர்.
6—10—1917.

To

Ilakkanavilakka Parambarai,
Somasundara Desikar,
Nagaramadam Street,
Tiruvalur.

Ready to undertake repairs and to institute Daily worship to Tiruvidaivai. Select men and inform.

Tiruvaduthurai Adinakarthar,
Tiruvadamaruthur.

இலக்கணவிளக்க பரம்பரை,
சோமசுந்தர தேசிகர்,
நகரமடத்துத் தெரு, திருவாரூர்.

திருவிடைவாய் கோவிலுக்கு திருப்பணிகள் நடத்தவும், பூசை நைவேத்தியத்திற்கு ஏற்பாடுசெய்யவும் தயார். தகுந்த மனுடாளைத்தெரிந்து தெரியப்படுத்தவும்.

திருவாவடுதுறை ஆதீனகர்த்தர்,
திருவிடைமருதூர்.
6—10—1917.

To

His Holiness Pandarasannidhigal,
Tiruvadamaruthur.

Received telegram. Arranging.

Ilakkanavilakka Parambarai,
Somasundara Desikar,
Tiruvalur.

திருவாவடுதுறைபண்டாரசந்நிதி அவர்கள் சமுகம்,
திருவிடைமருதூர்.

தந்தி பெற்றுக்கொண்டேன். ஏற்பாடுசெய்துகொண்டிருக்கிறேன்.

இலக்கணவிளக்க பரம்பரை,
சோமசுந்தர தேசிகர்,
திருவாரூர்.

கோச்செங்கட்சோழ நாயனாரைப்போலவும், ஐயடிகள் காடவர்கோனயனாரைப்போலவும் பல கோயில்கள்கட்டி காலஞ் சென்ற பூவனூர் சீமான் சு. இராசு முதலியாரவர்களும், முற்கூறிய களப்பாள் சீமான் சி. இரங்கசுவாமி முதலியாரவர்களும், யானும் முற்கூறியதந்தி கிடைக்கப்பெற்றவுடன் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச்சென்று ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிகமூர்த்திகளைத் தரிசித்தோம். அம்மூர்த்திகள் யாத்திரையிற்கண்ட வைபவங்களை உசாவியபின்னர் "திருவிடைவாய்" திருக்கோயிற் கட்டுவிக்கவும், பூசனை நடாத்தவும் விருப்பங்கொண்டிருப்பதாயும், திருவாரூர் இலக்கண விளக்க பரம்பரை சோமசுந்தர தேசிகரவர்களுக்கும் தந்தி கொடுத்திருப்பதாயும் திருவாய்மொழிந்தருளி பூசனைக்குவேண்டிய ஏற்பாடு செய்வித்தார்கள்.

திருவாரூர் இலக்கண விளக்க பரம்பரை சோமசுந்தர தேசிகரவர்கள் (திருவாவடுதுறை ஆதீனத்தினின்று வந்த தந்தியைப் பெற்றுக்கொண்டு, பதில்தந்தி கொடுத்துவிட்டு) களப்பாள் ஸ்ரீமான் சீ. இரங்கசுவாமி முதலியாரவர்களுக்கு எழுதிய கடிதம் :—

S. Somasundara Desikar,
Nagaramadam Street, Tiruvalur.

இலக்கண விளக்க பரம்பரை,

திருவாரூர்,
9—10—1917.

ஸ்ரீமான் முதலியாரவர்கட்கு சர்வாபீட்டங்களும் புத்திரப்பேறு முண்டாகவேண்டுமாக ஸ்ரீ தியாகேசனிடம் பிரார்த்தனை.

சுவாமிநாத உபாத்தியாயர் திருக்களரில் இருப்பதும் இல்லாததும் தெரியவில்லை. இன்று "திருவிடைவாய்" சம்பந்தமாக அதனை சீரணோத்தாரணம் செய்து நித்திய நைமித்திகங்கள் செய்வதாக "திருவாவடுதுறை" பண்டாரசந்நிதிகளிடமிருந்து தந்தி வந்திருப்பதால் அது சம்மந்தமாகச் செய்ய வேண்டிய மற்றக்காரியங்களுக்காக உபாத்தியாயரை இவ்விடம் வரும்படி செய்யவேண்டுகிறேன்.

தங்கள்,
S. Somasundara Desikar.

களப்பாள் ஸ்ரீமான் சீ. இரங்கசுவாமி முதலியாரவர்கள் (திருவாவடுதுறை ஆதீனத்தினின்று வந்தபின்னர் கிடைக்கப் பெற்ற) அக்கடிதத்திற்கு எழுதிய பதில்.

MEMORANDUM.

From Dated 13-10-1917.

S. Rangaswamy Mudaliar,
Mirasdar,
(N. Kalappal Post, Tanjore Dt.) Madras.

To

மகா-ள-ள-ஸ்ரீ சோமசுந்தர தேசிகரவர்கள்,
திருவாரூர்.

தண்டபாணி துணை.

மகா-ள-ள-ஸ்ரீ சோமசுந்தர தேசிகர் அவர்களுக்கு இரங்கசாமி தெண்டனிட்ட விண்ணப்பம்.

இப்பவும் தாங்கள் அனுப்பிய கடிதம்வந்து. சேதி தெரிந்தது. நானும் பூவனூர் மகா-ா-ஸ்ரீ இராசு முதலியாரவர்களும், திருக்களர் சுவாமிநாத உபாத்தியாயரும் திருவிடைமருதூர் போய் திருவாவடுதுறை பண்டாரசந்நிதி அவர்களை நேரில்கண்டு அவர்களும் திருவிடைவாய் கோவில் திருப்பணிசெய்வதாக பூவனூர் ஐயாவிடம் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். தங்களுக்கு தந்திகொடுத்த விபரம் அவர்களே சொன்னார்கள்.

ஆகையால் வேணும், தங்கள்,

S. இரங்கசாமி.

சிலநாளைக்குமுன் "திருவிடைவாய்"க்குச் சென்றிருந்தேன். திருவாவடுதுறை ஆதீனம் காலஞ்சென்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிகமூர்த்திகளிருந்தவரையில் அவர்களுடைய பொருளுதவியைக்கொண்டும், அதன்பிறகு குருக்களினுடைய சொந்த ஐவேசியைக்கொண்டும் தினம் ஒருகாலம் பூசைமாத்திரம் நடந்து வருகின்றது. முற்கூறியபடி கல்லில் வெட்டியிருக்கிற தேவாரம் ஆறும்பாடல் (முதலடியில் ஐந்தெழுத்தும்; இரண்டாமடியில் நான்கெழுத்தும்; மூன்றாமடியில் ஆறெழுத்தும்; நான்காமடியில் ஐந்தெழுத்தும்) பின்வருகிறபடி சிதைவுற்றும் ஏனையபாடல்கள் அச்சிற்பதிப்பித்தபடியு மிருக்கின்றன.

ஆறும்பாடல்.

கிள்ளை மொழியாளைக் கெழு * வ * * * *
* ள்ளித் தலைத்தக்கனைக் கொண்டவர்சார் * * *
* * * ல் நெ * * குமழலை * செவ்வாய்
வெள்ளைந் நகை * * * * * செய் விடைவாயே.

இப்பாடலைப் பின்வருகிறபடிதான் பாடங்கொள்ளலாம்.

கிள்ளை மொழியாளைக் கெழுவவாழ்த்தி
தள்ளித் தலைதக்கனைக் கொண்டவர் சார்வாம்
மள்ளல் நெருங் குமழலைச் செவ்வாய்
வெள்ளைந் நகையார் விளிசெய் விடைவாயே.

வேறுவிதமாகப் பாடங்கொள்ள என் சிற்றறிவுக்குப் புலப்படவில்லை. இந்தப்படியே ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினேழாம் ஆண்டில் அச்சிற்பதிப்பித்த "திருவிடைவாய்த் தேவாரம்" என்ற புத்தகத்திலும்; ஆயிரத்துத்தொளாயிரத்து இருபத்தோராம் ஆண்டில் அச்சிற்பதிப்பித்த "சைவசமயமும் தமிழ்ப்பாடையும்" என்ற புத்தகத்தினும் ஆறும்பாடல் இரண்டாமடியிலுள்ள பிசகைத் திருத்திக்கொள்ளவும்.

திருக்களர், ☞ மு. சுவாமிநாத உபாத்தியாயன்.

உ

திருவிடைவாய்த் தேவாரம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் திருவாய்மலர்ந்தருளியது.
(கல்வில் வெட்டியுள்ளது).

மறியார்கரத்தெந்தையம்மாதுமையோடும்
பிறியாதபெம்மானுறையுமிடமென்பர்
பொறிவாய்வரிவண்டுதன்பூம்பெடைபுல்கி
வெறியார்மலரிற்றுயிலும்விடைவாயே. (க)

ஒவ்வாதவென்பேயிழையாவொளிமேலிச்
செவ்வான்மதிவைத்தவர்சேர்விடமென்பர்
எவ்வாயிலுமேடலர்கோடலம்போது
வெவ்வாயரவம்மலரும்விடைவாயே. (உ)

கரையார்கடனஞ்சமுதுண்டவர்கங்கைத்
திரையார்சடைத்தீவண்ணர்சேர்விடமென்பர்
குரையார்மணியுங்குளிர்சந்தமுங்கொண்டு
விரைவாய்புனல்வந்திழியும்விடைவாயே. (ங)

கூசத்தழல்போல்விழியாவருகூற்றைப்
பாசத்தொடும்வீழவுதைத்தவர்பற்றும்
வாசக்கதிர்ச்சாலிவெண்சாமரையேபோல்
வீசக்களியன்னமல்கும்விடைவாயே. (ச)

திரியும்புரமூன்றையுஞ்செந்தழலுண்ண
வெரியம்பெய்தகுன்றவில்லியிடமென்பர்
கிரியுந்தருமாளிகைச்சூளிகைதன்மேல்
விரியுங்கொடிவான்விளிசெய்விடைவாயே. (ரு)

கிள்ளைமொழியாளைக்கெழுவவாழ்த்தி
தள்ளித்தலைதக்கனைக்கொண்டவர்சார்வாம்
மள்ளல்நெருங்குமழலைச்செவ்வாய்
வெள்ளைநகையார்விளிசெய்விடைவாயே. (சு)

பாதத்தொலிபாரிடம்பாடநடஞ்செய்
நாதத்தொலியர்நவிலும்மிடமென்பர்
கீதத்தொலியுங்கெழுமும்முழவொடு
வேதத்தொலியும்பயிலும்விடைவாயே. (எ)

எண்ணாதவரக்கனுரத்தைநெரித்துப்
பண்ணார்தருபாடலுகந்தவர்பற்றும்
கண்ணார்விழவிற்கடிவீதிகடோறும்
விண்ணோர்களும்வந்திறைஞ்சும்விடைவாயே. (அ)

புள்வாய்பிளந்தானயன்பூமுடிபாதம்
ஒள்வானிலந்தேடுமொருவர்க்கிடமாந்
தெள்வார்புனற்செங்கழுநீர்முகைதன்னில்
விள்வாய்நறவுண்டுவண்டார்விடைவாயே. (கூ)

உடையேதுமிலார்துவராடையுடுப்போர்
கிடையாநெறியான்கெழுமிம்மிடமென்பர்
அடையார்புரம்வேவமூவர்க்கருள்செய்த
விடையார்கொடியானழகார்விடைவாயே. (க0)

ஆறும்மதியும்பொதிவேணியனூர்
மாறில்பெருஞ்செல்வமலிவிடைவாயை
நாறும்பொழிற்காழியார்ஞானசம்பந்தன்
கூறுந்தமிழ்வல்லவர்குற்றமற்றோரே. (கக)

இப்பதிகம் "பண்ணடைவு" இன்றியிருத்தலினாலும்; முன்னும் பின்னும் "திருச்சிற்றம்பலம்" இன்றியிருத்தலினாலும்; "அடங்கன்முறை"யில் இல்லா திருத்தலினாலும், மறைந்துபோன தேவாரப்பதிகங்களிலொன்றாகியதென்பதும், அடங்கன்முறையைக் கண்டுபிடிப்பதற்கு முன்னே கல்லில் வெட்டியுள்ளதென்பதும் திண்ணமேயாகும். இதற்குப் "பண்ணடைவு" அமைப்பதும், "அடங்கன்முறை"யிற் சேர்ப்பதும் மிக்கவிசேடமாகும். இக்கோயிலைத்திருப்பணி செய்வோர் பெரும் பேற்றையடைவர்.

இத்தலம் "விடையன்" என்னும் சூரியகுலத்தரசன் உண்டு பண்ணியது. "இடபதேவர், ஆதிசேடன், அகத்தியமுனிவர், அத்திரிமுனிவர்" முதலியோர் பூசித்தது.

"இடபதீர்த்தம், ஆதிசேடதீர்த்தம், அத்திரிதீர்த்தம், அகத்தியதீர்த்தம், பாண்டவாய்நதி" முதலிய தீர்த்தங்களை யுடையது.

"மகாலிங்கம், தேவியார், விநாயகர், தாண்டவவிநாயகர், ஆதிசேடன், பைரவர், சூரியன், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்" இவர்களுடைய திருவுருவங்களிருக்கின்றன. "சுப்பிரமணியர், வள்ளியம்மை, தெய்வானை, மகாலக்ஷ்மி" இவர்களுடைய திருவுருவங்கள் அவ்வூர்ப் பெருமாள்கோயிலில் இருக்கின்றன.

அறுபத்துமூன்று நாயன்மார்களி லொருவராகிய ஐயடிகள் காடவர்கோனாயனார் திருப்பணிசெய்து பின்வரும்திருவெண்பாப் பாடப்பெற்றது.

திருவெண்பா.

மாண்டுவா யங்காவா முன்ன மடநெஞ்சே
வேண்டுவா யாகில்வி ரைந்தொல்லைப்—பாண்டவாய்த்
தென்னிடைவாய் மேய சிவனார் திருநாம
நின்னிடைவாய் வைத்து நினை.

இப்பாடல் பதினோராந் திருமுறையிலிருக்கிறது. திருநாவுக்கரசு நாயனார் திருவாய்மலர்ந்தருளிய "அடைவு" திருத்தாண்டகம் மூன்றும் பாடலில் "விடைவாய்க்குடி" என்று அருளிச்செய்திருக்கின்றார். "திருவிடைவாசல்" எனவும் கூறுவர்.

சுவாமிபெயர்—புண்ணியகோடிநாதர்.
தேவியார்பெயர்—அபிராமியம்மை.

குறிப்பு:—திருவாரூர் நீடாமங்கலம் இரயில் மார்க்கத்தில் "கொரடாச்சேரி"யிலிறங்கி தெற்கே கூத்தாநல்லூருக்குப் போகும் சாலையில் ஒரு மைல்தூரஞ்சென்று பாண்டவாயாற்றின் பாலத்தைக் கடந்து அந்நதியின் தென்கரையோடு சிறிதுதூரஞ்சென்று சாலையைவிட்டுப்பிரிந்து கரையிற்போகும் வண்டிப்பாதையோடு கிழக்கே அரை மைல்தூரஞ்சென்று பாலாகுடியைக் கடந்தால் "திருவிடைவாய்" என்னும் சிவதலத்தைச் சேரலாம்.

எட்வர்ட் பிரஸ்—திருவாரூர்.